பொருளடக்கம்

*

இஸ்லாம் 360

முதல் மதிப்புரை / 25
இரண்டாம் மதிப்புரை / 26
ஆசிரியர் உரை / 27

பகுதி 1 அல்லாஹ்வை அறிவதும் நேசிப்பதும் / 29

1 அல்லாஹ்வின் 103 பேரழகுப் பெயர்கள் / 31
அல்அஸ்மாஉல் ஹுஸ்னா / 33
2 லா இலாஹ இல்லல்லாஹ் உடைய 8 நிபந்தனைகள் / 41
3 அல்லாஹ்வின் அன்புக்கு 10 வழிகள் / 43
4 அல்லாஹ்வின் கருணைக்கு 7 வழிகள் / 45

பகுதி 2 அல்லாஹ்வின் தூதரும் நாமும் / 47

5 நேசமிக்க நபியோடு சொர்க்கத்தில் இருக்க 7 வழிகள் / 49
6 'என்னைச் சேர்ந்தவன் அல்ல' என்று அல்லாஹ்வின் தூதர் ﷺ எச்சரித்த 8 நபர்கள் / 51
7 அல்லாஹ்வின் தூதர் தன் உம்மத் விவகாரத்தில் அதிகம் பயந்த 8 விசயங்கள் / 52

பகுதி 3 உள்ளத்தின் ஆரோக்கியம் / 53

8 உள்ளத்தின் 9 அணிகலன்கள் / 55
9 உள்ளத்தைச் சுத்தப்படுத்த 10 வழிகள் / 56
10 நிம்மதியான வாழ்க்கைக்கு இஸ்லாம் கூறும் 7 வழிகள் / 58
11 உள்ளத்தின் 13 நோய்கள் / 64
12 உள்ளத்தின் நோய்களுக்கு 10 அருமருந்துகள் / 65
13 நோயுள்ள 25 உள்ளங்கள் / 66
14 ஆரோக்கியமான 10 உள்ளங்கள் / 68
15 கண்ணேறிலிருந்து பாதுகாப்புப் பெற 10 வழிகள் / 70
16 கவலைகள் நீங்க 12 வழிகள் / 71

பகுதி 4 சொர்க்கம் நுழையவும்
நரகத்தைவிட்டுத் தப்பிக்கவும் / 75

17 சொர்க்கத்திற்கு இட்டுச் செல்லும் மகத்தான 8 நற்செயல்கள் / 77
18 சொர்க்கத்தில் அந்தஸ்துகளை உயர்த்தும் 16 நற்செயல்கள் / 79
19 சொர்க்கத்தில் நுழைய முடியாத 10 நபர்கள் / 81
20 சொர்க்கத்தின் வாசத்தைக்கூட நுகர முடியாத
9 துர்பாக்கியசாலிகள் / 82
21 நரகத்திலிருந்து பாதுகாப்புப் பெற 9 வழிகள் / 83

பகுதி 5 தவ்ஹீதின் அறிவு / 87

22 தவ்ஹீதின் 4 வகைகள் / 89
23 ஸுன்னாவின் 4 வகைகள் / 90
24 வணக்கத்தின் 5 வகைகள் / 92
25 நற்செயல்கள் ஏற்கப்பட 2 நிபந்தனைகள் / 94
26 இணைவைத்தலின் 14 வகைகள் / 96
27 அச்சத்தின் 4 வகைகள் / 100
28 நேசத்தின் 4 வகைகள் / 104
29 நிராகரிப்பின் 24 வகைகள் / 106
30 நயவஞ்சகத்தின் 2 வகை / 108

பகுதி 6 ஈமானிய வாழ்க்கை / 111

31 ஈமானின் 78 கிளைகள் / 113
32 ஈமான் அதிகமாக 7 வழிகள் / 118
33 ஈமானை அதிகரிக்கக்கூடிய 10 காரணிகள் / 119
34 ஈமானைப் பலவீனப்படுத்தக்கூடிய 9 காரணிகள் / 120
35 சத்தியத்தை ஏற்கத் தடையாக இருக்கும் 10 காரணிகள் / 121
36 இஸ்லாமை விட்டு வெளியேற்றும் 10 விசயங்கள் / 122

பகுதி 7 பாவங்களை அஞ்சுதல் / 129

37 பெரும்பாவங்கள் 70 / 131
38 பாவங்கள் 30 மற்றும் மறுமையில் அவற்றின் தண்டனைகள் / 135
39 அல்லாஹ்வும் தூதரும் சபித்த 17 பாவங்கள் / 140
40 மறுமையில் அல்லாஹ் பார்க்காத, பேசாத,
பரிசுத்தப்படுத்தாத 9 நபர்கள் / 141

41 பகுதியாகவோ முழுமையாகவோ நற்செயல்களை அழிக்கக்கூடிய 8 காரணிகள் / 158
42 ஹறாமான 21 ஜாஹிலிய்யா காலத்துப் பண்புகள் / 159
43 பாவத்திலிருந்து தூரமாக 10 வழிகள் / 161
44 பாவங்களினால் ஏற்படும் 25 பாதிப்புகள் / 163
45 பாவங்களை அதிகம் செய்தவர் மன்னிக்கப்பட 15 வழிகள் / 169
46 ஷைத்தானைவிட்டுப் பாதுகாப்புப் பெற 15 வழிகள் / 171

பகுதி 8 நற்செயல்களில் ஆசைவைத்தல் / 175

47 திக்ரு செய்வதால் ஏற்படும் 10 பயன்கள் / 177
48 நன்மைகள் பல மடங்குப் பெருக 8 வழிகள் / 178
49 வானத்தின் கதவுகள் திறக்கப்படும் 9 அமல்கள் / 179
50 நன்மை செய்வோருக்குக் கிடைக்கும் 11 நற்பாக்கியங்கள் / 181
51 ஒரு நிமிடத்தில் எத்தனையோ அமல்கள் / 182
52 சிறப்பிற்குரியவர்களாக ஆகுவதற்கு 10 வழிகள் / 184
53 நற்செயல்கள் 105 மற்றும் அவற்றின் நன்மைகள் / 185

பகுதி 9 அருள்வளமிக்க வாழ்க்கை / 197

54 குர்ஆனும் ஸுன்னாவும் போதிக்கும் 54 நற்பண்புகள் / 199
55 வானவர்களின் பிரார்த்தனை கிடைக்க 10 வழிகள் / 202
56 வீட்டில் பரக்கத் மற்றும் நிம்மதி ஏற்பட 9 வழிகள் / 203
57 ரிஸ்க் எனும் வாழ்வாதாரத்தின் 15 திறவுகோள்கள் / 204
58 அழைப்பாளரிடம் இருக்க வேண்டிய 20 பண்புகள் / 206
ஆதார நூல்கள் / 208

1

அல்லாஹ்வின்
103 பேரழகுப் பெயர்கள்

*

அல்அஸ்மாஉல் ஹுஸ்னா (اَلْأَسْمَاءُ الْحُسْنَى) என்றால் அல்லாஹ்[1] வின் மிக அழகானப் பெயர்கள் எனப் பொருள். பொதுவாக அவற்றை 99 என்பார்கள். ஆனால், இவ்வளவுதான் என்று நினைத்துவிடக் கூடாது. அல்லாஹ்வின் அழகிய பெயர்கள் எண்ண முடியாதவை. அதன் எண்ணிக்கையை அவன் மட்டுமே அறிவான். அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊது ﷺ மூலம் அறிவிக்கப்படும் பின்வரும் நபிமொழியில் இதை அறிகிறோம்.

أَسْأَلُكَ بِكُلِّ اسْمٍ هُوَ لَكَ سَمَّيْتَ بِهِ نَفْسَكَ، أَوْ أَنْزَلْتَهُ فِي كِتَابِكَ، أَوْ عَلَّمْتَهُ أَحَدًا مِنْ خَلْقِكَ، أَوِ اسْتَأْثَرْتَ بِهِ فِي عِلْمِ الْغَيْبِ عِنْدَكَ، أَنْ تَجْعَلَ الْقُرْآنَ رَبِيعَ قَلْبِي

அல்லாஹ்வே, உனக்கு நீயே சூட்டிக்கொண்ட உன் எல்லாப் பெயர்கள் பொருட்டாலும், அல்லது நீ உன் வேதத்தில் இறக்கிய, அல்லது உன் படைப்புகளில் எவருக்கேனும் நீ கற்றுக் கொடுத்த, அல்லது உன்னுடைய மறைவான அறிவில் மறைத்து வைத்துள்ள பெயர்கள் பொருட்டாலும் கேட்கிறேன். மகத்தான குர்ஆனை[2] என் உள்ளத்திற்கு

1 அல்லாஹ் (ﷲ): படைப்புகள் வணங்குவதற்கும் கீழ்ப்படிவதற்கும் தகுதியான இறைவன் என்று பொருள். ஒவ்வொரு மொழியிலும் இறைவனைக் குறிப்பிடச் சொல்லப்படும் பொதுச்சொல் போல அறபுமொழியிலும் இதை அறபுக் கிறித்துவர்களும் யூதர்களும் பயன்படுத்தி வருகிறார்கள். எனினும், உண்மையில் இது வெறுமனே ஓர் அறபுச்சொல் அல்ல. அதையும் தாண்டி இறைவன் தனக்குத்தானே சூட்டிக்கொண்ட மிக அழகிய பெயர். அனைத்தையும் படைத்து பரிபாலிக்கும் ஒரே இறைவனை மட்டுமே இது குறிக்கும்.

2 குர்ஆன் (اَلْقُرْآن்): மொழி வழக்கில் குர்ஆன் என்றால் ஓதப்படுவது, படிக்கப்படுவது அல்லது தொகுக்கப்பட்டது எனப் பொருள். மார்க்க வழக்கில்

2

லா இலாஹ இல்லல்லாஹ் உடைய 8 நிபந்தனைகள்

*

லா இலாஹ இல்லல்லாஹ் என்றால் வணங்கப்படத் தகுதியான இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்பதாகும். இந்த உறுதிமொழியைக் கூறித்தான் ஒருவர் இஸ்லாமிய மார்க்கத்தை ஏற்க முடியும். இது வெறும் நாவால் சொல்வதோடு முடிந்துவிடுகிற விசயம் இல்லை. இதில் ஒருவர் உண்மையாளர் என்பதற்குப் பின்வரும் நிபந்தனைகள் நிறைவேற வேண்டும். அப்போது அவர் உண்மையாகவே அல்லாஹ்வைத் தன்னுடைய வணக்கத்திற்குரிய இரட்சகனாக நம்பிக்கைகொண்டிருப்பதாகப் பொருள். இல்லையெனில், அது ஒரு போலித்தனமான பேச்சாகிவிடும்.

அல்லாஹ்விடம் ஒருவரின் ஷஹாதா (உறுதிமொழி) ஏற்கப்படுவதற்கு இந்த நிபந்தனைகள் முக்கியமானவை:

1. அறிவு [47:19][4]

அல்லாஹ் மட்டும்தான் வணக்கத்திற்குரியவன் என்பதையும் அவனைத் தவிர மற்ற எதையும் வணங்கக் கூடாது என்பதையும் அறிந்திருக்க வேண்டும்.

4 இவ்வாறு அடைப்புக் குறியினுள் எண்கள் மட்டும் இருந்தால் அது திருக்குர்ஆனிலிருந்து தரப்படுகிற ஆதாரக் குறிப்பு என்று புரியுங்கள். முதல் எண் அத்தியாயத்தையும் இரண்டு புள்ளிகளை அடுத்துள்ளவை வசனங்களையும் குறிக்கும். இந்த நூலின் சுருக்கத்தைக் கருதி பெரும்பாலான ஆதாரங்களை அவை இடம்பெறும் நூலின் பெயர்கள் மற்றும் எண்களாக மட்டுமே தரப்பட்டுள்ளன. (ப.கு.)

4

அல்லாஹ்வின் கருணைக்கு 7 வழிகள்

*

1. இஹ்ஸான்

அல்லாஹ்வின் அருளையும் கருணையையும் பெறுவதற்கு முஹ்சினாக வாழ்வது. அதாவது, அல்லாஹ்வுக்கும் அவனுடைய படைப்புகள் அனைத்துக்கும் நன்மையை நாடுகின்ற இஹ்ஸான் எனும் பண்பைக் கடைப்பிடிப்பது.

2. இறையச்சமிக்க செயல்கள்

தக்வா, ஸகாத், அல்லாஹ்வின் ஆயத்துகளை ஈமான்கொள்வது மற்றும் நபியைப் பின்பற்றுவது.

3. இரக்கம்

பூமியில் உள்ளவர்களுக்கு இரக்கம் காட்டுவது.

4. கட்டுப்பாடு

அல்லாஹ்விற்கும் அவன் தூதருக்கும் கட்டுப்படுவது.

5. ஓதலைச் செவியுறல்

குர்ஆன் ஓதப்படும்போது வாய்மூடி, செவிதாழ்த்திக் கேட்பது.

6. ஏவல், விலக்கலை ஏற்று வாழ்தல்

அல்குர்ஆனின் கட்டளைகளைப் பின்பற்றுவது; அவன் தடைசெய்தவற்றைவிட்டு முழுமையாக விலகியிருப்பது.

7. துஆ

ரஹ்மத் எனும் அல்லாஹ்வின் கருணை வேண்டி துஆ செய்வது.

5

நேசமிக்க நபியோடு[6] சொர்க்கத்தில் இருக்க 7 வழிகள்

*

1. அனாதைக்கு ஆதரவு

அனாதைக் குழந்தைகளைப் பராமரித்து வளர்த்தல்.

2. நற்பண்புகள்

மகத்தான நற்பண்புகளை, நல்லொழுக்கங்களை வாழ்வில் பேணிவருதல்.

6 நபி (نَبِيّ), ரஸூல் (رَسُوْل): நபி, ரஸூல் ஆகிய இரண்டு சொற்களும் இறைத் தூதர் என்ற கருத்தையே தந்தாலும், இஸ்லாமிய ஆதாரங்களின் பார்வையில் வேறுபாட்டை உணர்த்துகின்றன. அல்லாஹ்வின் புறத்திலிருந்து வஹ்யி எனும் விசேஷச் செய்தியைப் பெறுபவர் நபி. உதாரணம்: ஹாரூன். ஆனால், வஹ்யியைப் பெறுவது மட்டுமின்றி, ஒரு சமூகத்திடம் அனுப் பப்பட்டு தனிச் சட்டதிட்டங்கள் (ஷரீஅத்) வழங்கப்படுபவர் ரஸூல். உதாரணம்: மூஸா, ஈசா. நபி என்பவர் தமக்கு முந்திய அல்லது சமகால ரஸூலின் ஷரீஅத்தைப் பின்பற்றுவார். மூஸாவின் ஷரீஅத்தை ஹாரூன் பின்பற்றினார். இஸ்ரவேலர்களுக்கு இவ்வாறு எல்லாக் காலத்திலும் நபிமார்கள் இருந்தார்கள். ஒரு நபி இறந்தவுடன் இன்னொரு நபியை அச்சமூகத்தில் அல்லாஹ் ஏற்படுத்துவான். அவர் மூஸாவின் ஷரீஅத் மூலமே அம்மக்களை வழிநடத்துவார். இந்நிலையில் ஈஸாவுக்குப் புதிய ஷரீஅத் வழங்கப்பட்டது. அவர் நபி மட்டுமின்றி ரஸூலாகவும் வந்தார். மொத்தத்தில் ஒரு இலட்சத்து இருபத்து நான்காயிரம் நபிமார்களில் முந்நூற்று பதிமூன்று பேர் ரஸூல்மார்கள் எனும் நபிமொழிப்படி ஒவ்வொரு ரஸூலும் நபிதான். ஆனால், ஒவ்வொரு நபியும் ரஸூல் அல்ல என்ற அடிப்படையைப் புரிய வேண்டும். முதல் நபி ஆதம். ஆனால், முதல் ரஸூல் நூஹ் என்பதிலிருந்தும் நபியின் தகுதியைவிட ரஸூலின் தகுதி உயர்ந்தது என்பதை உணரலாம். (ப.கு.)

15

கண்ணேறிலிருந்து பாதுகாப்புப் பெற 10 வழிகள்

*

1. அல்லாஹ்விடம் பாதுகாப்புக் கேட்டல்.
2. தக்வாவோடு வாழ்தல்.
3. பொறுமையோடு இருத்தல். (கண்ணேறு வைத்தவரிடத்தில்)
4. அல்லாஹ்வின்மீது முழுமையாகத் தவக்குல் வைத்தல்.
5. உள்ளத்தைக் கண்ணேறு வைப்பவர்களைவிட்டுப் புறக் கணித்தல்.
6. அல்லாஹ்வோடு தொடர்பை அதிகப்படுத்திக்கொள்ளல்.
7. அடிக்கடிப் பாவமன்னிப்புக் கோருதல்.
8. அதிகமாகத் தர்மங்கள் மற்றும் மக்கள் சேவை செய்தல்.
9. நம்மீது கண்ணேறு வைத்தவருடன் கருணையோடு, நல்ல முறையில் நடந்துகொள்ளல்.
10. எதிரிகளைவிட அல்லாஹ்வுக்கே அதிகம் அஞ்சுதல்.

✿

16

கவலைகள் நீங்க 12 வழிகள்

*

1. அல்லாஹ் என்னோடு இருக்கிறான் என்று எண்ணுதல்.
2. அல்லாஹ் எது நிகழ்த்தினாலும் அதில் ஒரு நலவு மற்றும் ஹிக்மத் (ஞானம்) இருக்கும் என்று உறுதியாக நம்புதல். (நமக்கு அந்த ஞானம் புரியவில்லையென்றாலும் சரி.)
3. மக்களோடு அல்லாமல் அல்லாஹ்வோடு அதிகத் தொடர்பை ஏற்படுத்துதல்.
4. 'எனக்குத் தவறிப்போனது என்னை வந்தடையாது, எனக்குக் கிடைத்தது ஒருபோதும் என்னை விட்டுத் தவறாது' என்று விதியை முழுமையாக நம்புதல்.
5. உலக வாழ்க்கையின் எதார்த்தத்தை உணர்தல். (துன்யா என்பது தற்காலிக அற்ப வாழ்க்கை என்று உறுதியாக நம்புதல்.)
6. அதிகமாக ஸலவாத் சொல்லுதல்.
7. 'அல்லாஹ் எனக்குத் தேர்வு செய்தது, நான் எனக்குத் தேர்வு செய்ததைவிட, நான் விரும்பியதைவிடச் சிறந்தது' என்று மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளுதல்.
8. சிரமத்தோடு இலகு இருக்கிறது என்ற அல்லாஹ்வின் வாக்குறுதியை உறுதியோடு நம்புதல்.

அறிஞர்கள் கூறுவார்கள்: 'நான் கேட்டது கிடைத்தால் அது ஒரு சந்தோஷம் எனக்கு. ஆனால், நான் கேட்டு அல்லாஹ் அதற்குப் பதிலாக எனக்கு வேறொன்றை அளித்தால், அது எனக்கு இரட்டிப்புச் சந்தோஷமாகும்.' - இவ்வாறு நம்பக்

17

சொர்க்கத்திற்கு இட்டுச் செல்லும் மகத்தான 8 நற்செயல்கள்

*

1. தவ்ஹீது கொள்கையில் உறுதியாக இருந்து, அல்லாஹ்விற்கு இணைவைக்காமல் இருந்து மரணித்தல்.
2. அதிகமாக ஸஜ்தா செய்தல்.
3. நாவையும் மறைவுறுப்பையும் பாதுகாத்தல்.
4. எந்த நேரமும் மூன்று முறை சொர்க்கத்தைக் கேட்டு துஆ செய்தல்.
5. ஸய்யிதுல் இஸ்திக்ஃபார் எனும் தலையாய பாவ மன்னிப்புப் பிரார்த்தனையை ஓதுதல்.

اَللَّهُمَّ أَنْتَ رَبِّي لاَ إِلَهَ إِلَّا أَنْتَ، خَلَقْتَنِي وَأَنَا عَبْدُكَ، وَأَنَا عَلَى عَهْدِكَ وَوَعْدِكَ مَا اسْتَطَعْتُ، أَعُوذُ بِكَ مِنْ شَرِّ مَا صَنَعْتُ، أَبُوءُ لَكَ بِنِعْمَتِكَ عَلَيَّ، وَأَبُوءُ لَكَ بِذَنْبِي فَاغْفِرْ لِي، فَإِنَّهُ لاَ يَغْفِرُ الذُّنُوبَ إِلَّا أَنْتَ

அல்லாஹும்ம அன்த்த ரப்பீ, லா இலாஹ இல்லா அன்த்த, கலக்தனீ, வஅன அப்துக, வஅன அலா அஹ்திக வவஃதிக மஸ்ததஃது, அஊது பிக மின் ஷர்ரி மா சனஃது, அபூஉ லகப் பி நிஃமத்திக அலைய்ய, வ அபூஉ பீதன்பீ, ஃபங்ஃபிர்லீ ஃப இன்னஹு லா யஃபிருத்துனூப இல்லா அன்த்த.

பொருள்: அல்லாஹ்வே! நீ என் இரட்சகன். உன்னைத் தவிர வணக்கத்திற்குரிய வேறு இறைவன் இல்லை. என்னை நீ படைத்தாய். நான் உன் அடிமையாவேன். என்னால் இயன்ற மட்டும் நான் உனக்குச் செய்து கொடுத்த உறுதிமொழியையும் வாக்குறுதியையும் நிறைவேற்றியுள்ளேன். நான் செய்தவற்றின் தீங்கிலிருந்து உன்னிடம் பாதுகாப்புக்

31

ஈமானின் 78 கிளைகள்

*

ஈமான் என்பது மனித வாழ்வின் அனைத்துத் துறைகளையும் சூழ்ந்து நிற்கும் வாழ்க்கைத் திட்டத்தின் பெயராகும். ஏகத்துவக் கொள்கை என்பது ஈமானின் நுழைவாயில். அதனுள் நுழைந்த பிறகு அதில் கடக்க வேண்டிய எத்தனையோ கட்டங்கள் உண்டு. நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

الإِيمَانُ بِضْعٌ وَسَبْعُونَ أَوْ بِضْعٌ وَسِتُّونَ شُعْبَةً فَأَفْضَلُهَا قَوْلُ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَأَدْنَاهَا إِمَاطَةُ الأَذَى عَنِ الطَّرِيقِ وَالْحَيَاءُ شُعْبَةٌ مِنَ الإِيمَانِ

ஈமானிற்கு எழுபதிற்கும் அதிகமாகக் கிளைகள் உள்ளன. அதில் முதன்மையானது லா இலாஹ இல்லல்லாஹ் என்பதாகும். அதில் இறுதியானது துன்பம் தருகின்ற பொருளைப் பாதையிலிருந்து அகற்றுவது. வெட்கமும் ஈமானில் ஒரு பகுதியாகும். (அறிவிப்பு: அபூ ஹுறைறா ؓ, முஸ்லிம் 35)

ஈமானின் கிளைகள்

1. அல்லாஹ்வை நம்புவது.
2. மலக்குகளை நம்புவது.
3. வேதங்களை நம்புவது.
4. இறைத்தூதர்களை நம்புவது.
5. உலக அழிவுநாளை நம்புவது.
6. விதியின் நன்மை, தீமையை நம்புவது.
7. மரணத்திற்குப் பின் எழுப்பப்படுவதை நம்புவது.
8. மரணத்திற்குப் பின் எழுப்பப்பட்டு ஓரிடத்தில் ஒன்று சேர்க்கப்படும் மஹ்ஷரை நம்புவது.

37

பெரும்பாவங்கள் 70

*

அல்லாஹ் திருமறையில் கூறுகிறான்:

إِنْ تَجْتَنِبُوا كَبَائِرَ مَا تُنْهَوْنَ عَنْهُ نُكَفِّرْ عَنْكُمْ سَيِّئَاتِكُمْ وَنُدْخِلْكُمْ مُدْخَلًا كَرِيمًا

உங்களுக்குத் தடைசெய்யப்பட்ட பெரும்பாவங்களைச் செய்வதிலிருந்து நீங்கள் விலகிக்கொண்டால், நாம் உங்களுடைய சிறிய பாவங்களை (அதற்குப் பரிகாரமாக்கி) உங்களைவிட்டு அழித்துவிடுவோம். அத்துடன், உங்களை மிக்க கண்ணியமான இடங்க(ளாகிய சொர்க்கச் சோலைக)ளிலும் நுழைவிப்போம். (குர்ஆன் 4:31)

பெரும்பாவங்களைவிட்டுத் தவிர்ந்திருப்பதின் மூக்கியத்துவத்தை இவ்வசனம் உணர்த்துகிறது. அவற்றை விடாத வரை நம்முடைய சிறிய பாவங்களும் மன்னிக்கப்படாது என்ற எச்சரிக்கை இதில் இருக்கின்றது. இப்பகுதியில் பெரும் பாவங்களின் பட்டியல் ஆதாரத்துடன் சுருக்கமாகக் கூறப் படுகின்றது. நாம் கட்டாயம் இவற்றைச் செய்யாமல் விலகியிருக்க வேண்டும்; செய்திருந்தால் உடனே அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கேட்டு மனந்திரும்ப வேண்டும். அல்லாஹ் நம்மை நேர்வழியில் செலுத்துவானாக.

1. ஷிர்க் - அல்லாஹ்வுக்கு இணைவைத்தல் (5:72)
2. கொலை (4:93)
3. சூனியம் (2:102)
4. தொழுகையை வீணாக்கிவிடுதல் (107:4,5)
5. ஸகாத்தைக் கொடுக்க மறுத்தல் (3:180)

39

அல்லாஹ்வும் தூதரும் சபித்த 17 பாவங்கள்

*

1. இறைநிராகரிப்பு.
2. மார்க்கக் கல்வியின்றி அல்லாஹ்வைப்பற்றிப் பேசுவது.
3. அல்லாஹ்வுடைய விசயத்தில் பொய் கூறுவது.
4. கற்பொழுக்கமுள்ள பெண்கள்மீது அவதூறு கூறுவது.
5. சத்தியத்தை மறைப்பது.
6. பெற்றோர்களைச் சபிப்பது.
7. அல்லாஹ் அல்லாதவைக்காக அறுத்துப் பலியிடுவது.
8. பித்அத்வாதிகளுக்கு அடைக்கலம் கொடுப்பது.
9. பூமியின் அடையாளங்களை மாற்றுவது.
10. நபிமார்களின் அடக்கத்தலங்களை உயர்த்தி சமாதியைக் கட்டி எழுப்புவது.
11. மார்க்கத்தை வளைக்க தந்திரங்களைக் கையாள்வது.
12. பச்சை குத்துவது, ஒட்டுமுடி வைப்பது.
13. மதுபானத்தை வாங்குவது, விற்பது, அதற்கு உதவுவது போன்ற அதில் சம்பந்தப்பட்ட செயல் எதுவாக இருந்தாலும் அதைச் செய்வது.
14. மிருகங்களைப் போன்று நடந்துகொள்வது.
15. ஆண்களைப் போன்று பெண்களும், பெண்களைப் போன்று ஆண்களும் நடந்துகொள்வது.
16. வட்டியை உண்பது.
17. இலஞ்சம் கேட்பது மற்றும் வாங்குவது.

47

திக்ரு செய்வதால் ஏற்படும் 10 பயன்கள்



1. திக்ரு செய்வதால் உள்ளம் அமைதி பெறும்.
2. அல்லாஹ்வுடைய நெருக்கம் ஏற்படும்.
3. உள்ளத்திலும் முகத்திலும் நூர் - ஒளி ஏற்படும்.
4. ரிஸ்க் எனும் வாழ்வாதாரத்தில் பரக்கத் ஏற்படும்.
5. ஈமானின் சுவையை உணர்ந்துகொள்ள முடியும்.
6. ஷைத்தானை நெருங்கவிடாமல் பாதுகாக்கும்.
7. உடலையும் உள்ளத்தையும் உறுதியாக்கும்.
8. கவலைகளைப் போக்கி சந்தோஷத்தை ஏற்படுத்தும்.
9. உள்ளத்தை எப்பொழுதும் உயிரோட்டமாக வைத்திருக்கும்.
10. உள்ளத்தைச் சுத்தப்படுத்தும்.



56

வீட்டில் பரக்கத் மற்றும் நிம்மதி ஏற்பட 9 வழிகள்

*

1. ஸுறத்துல் ஃபலக்கை வழமையாக ஓதி வருதல். அதன் படி வாழ்தல்.
2. ஸுன்னத் மற்றும் நஃபில் போன்ற உபரியான தொழுகைகளை வழமையாகத் தொழுது வருதல்.
3. பிஸ்மில்லாஹ் (بِسْمِ اللهِ) கூறி உணவு உண்ணுதல். வீட்டில் நுழையும் முன் பிஸ்மில்லாஹ் கூறுதல்.
4. வீட்டில் நுழைந்தவுடன் ஸலாம் கூறுதல்.
5. உருவப்படங்கள், உருவப் பொம்மைகள் வீட்டில் இல்லாமல் இருத்தல்.
6. வீட்டில் நாய் வளர்க்காமல் இருத்தல்.
7. உணவுப் பாத்திரங்களை மூடிவைத்தல். வீட்டுக் கதவை பிஸ்மில்லாஹ் (بِسْمِ اللهِ) கூறி மூடுதல்.
8. இசையை இசைக்காமலும் கேட்காமலும் இருத்தல்.
9. வீட்டைச் சுத்தமாக வைத்துக்கொள்ளுதல். வீட்டில் உள்ளவர்கள் தங்களது உள்ளத்தையும் தூய்மையாக வைத்துக்கொள்ளுதல். உதாரணம்: பெருமை, கஞ்சத்தனம், குரோதம் நயவஞ்சகம் இணைவைப்பு முதலியன இல்லாமல் இருத்தல்.

✿